இந்திய படை விலக்கம்

அனைத்துக் கட்சி மாநாடு

# லங்கைப் ரச்சினைகள் தீருமா?



ரோகண விஜயவீரா
ஜே.வி.பி. தலைவர்



பிரபாகரன

செப்டம்பர் 13. இலங்கை - ஈழ விவகாரங்களில் இன்று முக்கிய ள். இலங்கையின் நெருக்கடிகளுக்குத் 'தீர்வுகாண' அனைத்துக் கட்சி டு கொழும்பில் இன்று கூடுகிறது. இந்தியப் படைவிலக்கம் குறித்து - இந்திய அரசுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஒப் ன்று அறிவிக்கப்படும் என்று பரவலாக நம்பப்படுகிறது.

தியா, இலங்கை ஆகிய இருநாட்டு அரசுகளுமே விட்டுக் கொடுத்து படை விலக்கம் குறித்து ஒரு நல்ல, சிநேகபூர்வ ஒப்பந்தத்துக்கு வந்தி . உடனடியான படைவிலக்கம் என்ற கோரிக்கையை பிரேமதாசா விட்டார். இவ்வருட இறுதிக்குள் படைவிலக்கம் என்பதற்கு ஒப்புக் விட்டார். வடகிழக்கு மாகாண அரசுக்கு அதிகாரப்பகிர்வு செய்வது, ர்களுக்குப் பாதுகாப்பு ஆகியன அடிப்படையில் மட்டுமே படைவி ன்கிற நிபந்தனைகளை இந்தியாவும் கைவிட்டு விட்டது. வடகிழக்கு அமைதிக்கமிட்டியில் புலிகள் பங்கேற்பது மற்றும் ஆயுதக் களைப்பு டிப்படையில் தான் போர் நிறுத்தம் என்கிற நிபந்தனைகளையும் இந் விட்டு விட்டது. நிபந்தனையற்ற போர்நிறுத்தத்துக்கும், மற்ற விவகா இலங்கை அரசின் பொறுப்பில் விடவும் இந்தியா சம்மதித்து விட்டது. ப்படையில் வரும் டிசம்பர் 31ந் தேதிக்குள் படிப்படியாக இந்தியா டகளை விலக்கிக் கொள்ளும்''

வ்வாறு ஒப்பந்த உள்ளடக்கங்கள் பற்றி அதிகாரபூர்வ வட்டாரங்கள் ள கசிய விட்டுள்ளன. இதன் அர்த்தம் என்ன? இந்தியா தனது பிராந் க, ஆக்கிரமிப்பு - விரிவாக்கத் திட்டங்களைக் கைவிடுமா? ஒருக்கா லை.

ழ்நாட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவத்தினரைக் கொண்ட டயைத் திரட்டி ஈழத்துக்கு அனுப்பியுள்ளது. நேரடியாக ஆள்சேர்ப்பு அம்பலமாகிவிடும் என்பதற்காக, மாஜி இராணுவத்தினர் நடத்தும் பாதுகாப்புப் படைக் கம்பெனிகள் மூலம் கூலிக்கு அமர்த்திக் கொண் ஈழப் போராளிகளுக்கெதிரான அதிரடித் தாக்குதல் நடத்துவது; சிங் ளம் மக்களைப் படுகொலை செய்து இனக்கலவரத்தைத் தூண்டி கள் மீது பழிபோடுவது; இலங்கை அரசுக்கு எதிராக சதி - நாச வேலை வது; ஈழ துரோகப் படைகளுக்கு ஆயுதப் பயிற்சியளிப்பது ஆகியன லிப்படைக்கான வேலைகள். - **இது அப்படி அனுப்பப்பட்ட படையினரே நம்மிடம் நேரடியாகச் சொன்ன**

மக்கள் தொண்டர்படை' என்கிற பெயரில் பகிரங்கமாகவும், ஈழ குழுக்களுக்கு மறைமுகமாகவும் இந்திய இராணுவம் பயிற்சியளிக் ம்களை கிழக்கு ஈழப்பகுதியில் நடத்துகிறது. இலங்கை சுற்றுலா விடுதி ளர்களின் சங்கமே இது குறித்துப் புகார் கொடுத்துள்ளது. ஏராள ன ஆயுதங்கள் அங்கே குவிக்கப்படுகிறது.

டவிலக்கம் - போர்நிறுத்தத்துக்கு முன்பாக சாத்தியமான அளவு புலி யுதபலத்தை நிர்மூலமாக்கி முடக்கி விடுவது; குறிப்பாக புலிகளுக்கு ன பின்பலம் உள்ள யாழ் வளைகுடாப் பகுதியில் கிராமம் கிராமமாக ள் படுகொலைகளை நடத்தி - அழித்து, பீதியை உருவாக்கி மக்கள் த் தகர்ப்பது - இந்த நோக்கத்துக்காக முன்னிலும் வெறிகொண்டு இந் ணுவத் தாக்குதல் நடத்தப்படுகின்றன. பருத்தித்துறை - வல்வெட்டித்து கொலைகளும், மீண்டும் அகதிகள் ஓடிவரத் துவங்கியிருப்பதும் இதற் ன்றுகள்.

, இந்தியாவின் நேரடியான ஆக்கிரமிப்புப் போர்தான் நிறுத்தப்படுமே ழத் துரோகிகளும் கூலிப்படையினரும் நடத்தும் பதிலிப்போர் Y WAR) தொடரும்; கூடவே இலங்கை அரசுடனான அரசுதந்திரப் ரும் தொடரும் என்பதில் சந்தேகமே கிடையாது. அதற்கான எல்லா களையும் இந்திய அரசு செய்து வருகிறது. இந்தியப் படைவிலக்கத்துக் குப் பிறகு ஈழத்தில் ரத்தக்களறி ஏற்படும் என்று பாசிச ராஜீவ் கும்பலும் அதன் அடிவருடிகளும் எச்சரித்து வருவது தாம் நடத்தத் திட்டமிட்டுள்ள சதியைத்தான் குறிக்கிறது!

சில துரோகிகள் தவிர இலங்கையின் அனைத்துப்பிரிவு மக்களும் ஏகோ பித்த குரலில் வெளியேறும்படி முழங்கியது; வெல்ல முடியாத ஆக்கிரமிப்புப் போரில் சிக்கிக்கொண்டு பெருமளவு பொருள் மற்றும் உயிர்பலியிடுவதற்கு எதி ராக இந்தியாவிலேயே நிலவும் எதிர்ப்பு; தேர்தல் ஆண்டில் ஆக்கிரமிப்புப் போர் ஏற்படுத்தும் எதிர்விளைவு; சர்வதேச ரீதியில் நியாயப்படுத்த முடியாமல் தனிமைப்பட்டுப் போனது - ஆகிய காரணங்களால் நேரடிப்போரை முடித்துக் கொண்டு மறைமுகப் போருக்குப் போகும்படி பாசிச ராஜீவ் கும்பல் நிர்பந்திக் கப்பட்டுள்ளது.

அவமானத்துக்கும் அருவெறுப்புக்கும் உரிய ஓர் ஆக்கிரமிப்புப் போரை நடத்திவிட்டு நாடு திரும்பும் இந்திய இராணுவத்தை மாபெரும் தியாகம் புரிந்து அமைதிப் பணியாற்றித் திரும்பும் வெற்றிப்படையாக சித்தரித்து பொய்ப் பிரச் சாரமும் தேசியவெறியும் இங்கே பெரிய அளவிலே நடக்கும். வரவேற்பு விழாக் களும் வாழ்த்துக்களும், பரிசுகளும் மாலைகளும் குவியும். ஓட்டுப்பொறுக்குவ தைக் குறியாக வைத்து பாசிச ராஜீவ் கும்பல் திட்டமிட்டே இவற்றை செய்யும். திராவிட, இனமான சிங்கங்களோ அந்தத் தேசிய வெறியுடன் சமரசம் செய்து கொண்டு விடுவார்கள்.

ஆனால் இந்திய இராணுவத்தின் ஈழத்து அக்கிரமங்கள் - அட்டூழியங் களை மேலும் ஆதாரத்துடன் அம்பலப்படுத்துவது புரட்சியாளர்களின் சர்வ தேசியக் கடமையாகும்.

ஜனாதிபதி ஆட்சி முறைக்குப் பதிலாக பிரதமர்-நாடாளுமன்ற ஆட்சி முறை, மீண்டும் பொதுத்தேர்தல்கள் நடத்துவது, அதுவரை ஒரு இடைக்கால அரசு அமைப்பது ஆகியன கொழும்புவில் நடக்கும் அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் எதிர்க்கட்சிகள் கோருகின்றன. அரசியல் அமைப்பு சட்டத்திருத்தங் கள் குறித்துப் பரிசீலிப்பதாக பிரேமதாசா ஒப்புக்கொண்ட போதும் அதிகாரத் தைக் கைவிட சம்மதிக்க மாட்டார். அதைவிட முக்கியமானது ஆயுதபலம் பொருந்திய மிகப்பெரும் சக்தியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இந்த மாநாட்டைப் புறக்கணித்து விட்டது. எனவே பாரிய விளைவு எதையும் மாநாடு சாதித்து விட முடியாது.

இந்தியப் படைவிலக்கத்தை சாதித்து விட்டால் ஜே.வி.பி.யிடமிருந்து அர சியல் முன்முயற்சியைப் பறித்து, அதை ஒடுக்கிவிடலாம் என்று பிரேமதாசா கும் பல் நம்புகிறது. அது ஜே.வி.பி.யைக் குறைத்து எடைபோடுவதாகும். படைவி லக்கம் மட்டுமல்ல; கடந்த ஜனாதிபதி, நாடாளுமன்ற தேர்தல்கள் மோசடியா னவை, ரத்து செய்ய வேண்டும் என்பது உட்பட பல அரசியல் கோரிக்கைகளை யும் வைத்து ஜே.வி.பி. இயக்கம் காட்டியுள்ளது. மாணவர் - இளைஞர்கள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் ஆகிய பல பிரிவினரையும் திரட்டியுள்ளது. பல அரசியல் வேலைநிறுத்தங்களை பல நாட்களாக வெற்றிகரமாக நடத்தியும், ஆயுதபலம் பெற்றும் உள்ளது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவ தற்குக் குறைவான எந்த கோரிக்கைக்கும் ஜே.வி.பி. இறங்கி விடாது.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான இயக்கம் - போரை நடத்துவதினால் ஜே.வி.பி, புலிகள் உட்பட எல்லா தேசபக்த சக்திகளையும் நாம் ஆதரிக்கிறோம். ஆனால் படைவிலக்கத்துக்குப் பிறகு உள்நாட்டுப் போரில் அவர்களின் செயல் பாடுகளை அப்படியே ஆதரிக்க முடியாது. தேச துரோகிகளை அவர்கள் தண் டிப்பதைக் குறை கூறமுடியாது. துரோகத்துக்குரிய 'பரிசை' அளிப்பது சரியா னதே! ஆனால் இந்திய ஆக்கிரமிப்பு போரை எதிர்த்து வந்த தேசபக்த, ஜனநாயக சக்திகளான வேறு பிற போராளிக் குழுக்களுக்கு எதிராக தடைவிதிப்பது, ஒடுக் குவது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவ தையோ, சிங்கள இனவாத, சமூக பாசிச, தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைக ளில் ஜே.வி.பி.யினர் ஈடுபடுவதையோ நாம் ஆதரிக்க முடியாது!